**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :– திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2025 ம் ஆண்டு ஜீன் திங்கள் 17 ஆம் நாள் செவ்வாய்கிழமை

IA.No.7/2024 in OS.No.72/2015

முத்துராமலிங்கம் ... மனுதாரர்/வாதி

–எதிர்–

1) முனியாண்டி (இறந்துவிட்டார்)
2) முருகன்
3) முனீஸ்வரி
4) அன்னபூரணி
5) உமாதேவி
6) பாண்டியராஜ்
7) ராம்குமார்
8) முத்துலெட்சுமி
9) நித்யா
10) நிமலா
11) ஜோதிபிரகாஷ்
12) மாரியப்பன்
13) நடராஜன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 12.06.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.துரைசரவணன், M.B.A. B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில். 2, 3, 8, 9, 10, 11, 13 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதரப்பாக்கப்பட்ட நிலையில். 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பா.பாண்டியன், B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 12ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மணிகண்ணன், B.A., B.L., மனுஉரை, எதிர்உரைகள், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் கடந்த 03.03.2023ம் தேதி முடிக்கப்பட்ட சாட்சியத்தை மீண்டும் விசாரிக்க மறுதிறப்பு செய்ய உத்தரவிடக் கோரி பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டப்பிரிவின் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்**

தாவா மனுவில், மனுதாரர் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு வழக்கு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. தாவா வழக்கில் எழுத்து பூர்வமான வாதுரை தயார் செய்து கொண்டிருந்த போது சில விசயங்கள் மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்ய வேண்டியது பற்றி மனுதாரரின் வழக்கறிஞர் தரப்பில் நிரூபணம் செய்வது பற்றி மூத்த வழக்கறிஞரை கலந்து ஆலோசித்ததன் பேரில் வழக்கு பற்றி அனைத்து சங்கதிகளையும் எடுத்துக்கூறி 4 முதல் 7 பிரதிவாதிகள் தபசில் 2வது லக்க சொத்தை பொறுத்து சொத்தின் சுவாதீனம் பெறாமல் 12ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அந்த ஆவணத்தில் கண்ட சொத்தின் அனுபவமானது 4 முதல் 7 பிரதிவாதிகள் பக்கம் கிடைக்கப்பெற்றதாகவும் அதனடிப்படையில் சொத்தினை கிரையம் பெற்றுள்ளதாகவும் 12ம் பிரதிவாதி சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சொத்தின் சுவாதீனத்தை பெற்றதாக பட்டாவினை பெற்று 4 முதல் 7 பிரதிவாதிகள் பொய்யாக குறிப்பிட்டு கியைம் செய்துள்ளதாகவும் இது சம்பந்தமாக 12ம் பிரதிவாதி அவரது சாட்சியத்தில் வட்டாட்சியரை அழைத்து விசாரிக்க தகவல் தெரிவித்து, பின் வட்டாட்சியரை விசாரிக்காமல் சாட்சியத்தை முடித்துள்ளார் என்பதால் 2வது லக்க சொத்தை பொறுத்து வட்டாட்சியருக்கு சம்மன் அளித்து விசாரித்து 2வது லக்க சொத்தின் சுவாதீனம் வழங்கப்படவில்லை என்றும் பட்டா பெயர் மாற்றம் செய்த ஆவணங்களை சமர்ப்பித்து சாட்சியம் அளிக்க வேண்டியுள்ளதால் மனுதாரர் தரப்பில் கடந்த 03.03.2023ம் தேதி முடிக்கப்பட்ட சாட்சியத்தை மீண்டும் விசாரிக்க மறுதிறப்பு செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 4 முதல் 7 எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம்**

தாவா வழக்கு பிரச்சனை ஏற்கனவே அ.வ.எண்.13/1999 ல் முடிவுற்ற ஒன்றாகும். மீண்டும் 2 வது முறையாக தாவா வழக்கு அதே பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கடந்த 9 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. வாதி தரப்பு வா.சா.1 சாட்சியம் 2019 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தாவா வழக்கில் வட்டாட்சியர் தரப்பு சாட்சியம் தேவையில்லாத ஒன்றாகும். எனவே எதிர்மனுதாரர்கள் பக்க செலவுத் தொகையுடன் மனுதாரரது மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**12 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம்**

அசல் வழக்கு தாக்கல் செய்து 10 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் மீண்டும் இது போன்ற மனுக்களை தாக்கல் செய்து அசல் வழக்கினை காலதாமதப்படுத்தி வருகிறார். எனவே 03.03.2023 ம் தேதி முடிக்கப்பட்ட சாட்சியத்தை மீண்டும் விசாரிக்க மறுதிறப்பு செய்வதற்காக தாவா இடைநிலை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் கூறியுள்ள விசயம் அனைத்தும் மறுக்கப்படுகிறது. எனவே எதிர்மனுதாரர் பக்க செலவுத் தொகையுடன் மனுதாரரது மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் கோரிய பரிகாரத்தை அவருக்கு வழங்க வேண்டுமா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

(6–i) மனு உரை பரிசீலிக்கப்பட்டது. 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கவுண்டர் அபிடவிட், 12 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரை பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்குரை மற்றும் எதிர்வாதிகள்

தரப்பில் தாக்கலான எதிர்வழக்குரைகள் மற்றும் இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள் முறையாக பரிசீலிக்கப்பட்டன. மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கலான ரீ–ஓப்பன் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட்ட விதி 75 மற்றும் பிரிவு 151ன் கீழான மனுவும் முயையாக பரிசீலிக்கப்பட்டது. தற்பொழுது மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இரண்டு மனுக்களிலும் சொல்லியுள்ள சங்கதிகளை பரிசீலிக்கும் பொழுது பிராது "B" செடியுல் சொத்தில் 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 7 எதிர்வாதிகள் சேர்ந்து சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ள E.P.No.4/2019 சம்பந்தமாக எடுத்துரைக்கும் பொழுது சுவாதீனம் பெறாமல் பட்டா பெற்றதை இந்த மனுதாரரால் ஆட்சேபிக்கப்படுகிறது. மேலும் அந்த பட்டாவின் அடிப்படையில் 12ம் எதிர்மனுதாரர்/12ம் எதிர்வாதிக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டதையும் இந்த மனுதாரர்/வாதியானவரால் ஆட்சேபிக்கப்படுகிறது. மேலும் 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் பிராது பி செடியூல் சொத்தில் 1/3 பங்கினை பொறுத்து 4 முதல் 7 எதிர்மனுதாரர்களும் தீர்ப்பாணையினை பதிவு செய்து அதன் மூலம் பட்டாவை மோசடியாக பெற்றுள்ளதாகவும், மனுதாரர்/வாதியால் எடுத்துரைக்கப்படுகின்றதாகவும். மேலும் மனு வாதுரை சமயத்தில் அந்த மோசடியான பட்டாவின் அடிப்படையில் கிரையம் செய்துள்ளதாகவும் இது சம்பந்தமாக 12ம் பிரதிவாதி தனது சாட்சியத்தில் வட்டாட்சியரை அழைத்து விசாரிக்க தகவல் தெரிவித்து பின் வட்டாட்சியரை விசாரிக்காமல் தனது தரப்பு சாட்சியத்தை முடித்துள்ளார் என்பதால் தபசில் கண்ட 2வது லக்க சொத்தை பொறுத்து வட்டாட்சியருக்கு சாட்சி சமன் அளித்து விசாரிக்க வேண்டி அனுமதி கோரி இம்மமனு தாக்கலாயிற்று.

(6–ii) தற்பொழுது இந்த மனுவை பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணைகளை பரிசீலிக்கும் பொழுது பெருத்த ஆட்சேபணை செய்யப்பட்டதாக இல்லை. மேலும் முந்தைய வழக்கு பற்றியும் இவ்வழக்கானது 10 ஆண்டு கால பழமையான வழக்கு என்றும், வட்டாட்சியரை விசாரிக்கப்போவதால் எவ்வித பலனும், நன்மையும் ஏற்பட போவதில்லை என்றும், வழக்கின் தீர்ப்புரைக்கு கட்டுப்பட்டு தான் பட்டா மற்றும் வட்டாட்சியரின் செயல்முறைகள் பொருந்தும், வழக்கு

வாதுரை கேட்கப்பட்டுவிட்டது என்றும் காலம் தாழ்த்தவே இம்மனு தாக்கலாகியுள்ளதாக வாதுரைக்கப்பட்டது.

(6–iii) எனவே மனுஉரையையும், ஆட்சேபணையையும் கருத்தில் கொள்ளும் பொழுது, அசல் வழக்கில் கோரிய பரிகாரத்தினை பரிசீலிக்கும் பொழுது குறிப்பாக பிராது "பி" அயிட்ட சொத்தை பொறுத்து பரிசீலிக்கும் பொழுது பட்டா நடவடிக்கையை பொறுத்து விரிவாக விடை காண வேண்டியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் பட்டா ஆவணம் என்பது சொத்து உரிமையை தீர்மானிக்க கூடிய ஆவணம் இல்லை என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். இருப்பினும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் பட்டாவை மையமாக வைத்து வழக்கை மேல்நடத்திவருவதை காண முடிகிறது. அந்த பட்டா நடவடிக்கைகள் தான் மனுதாரர் தரப்பில் ஆட்சேபணையாக உள்ளது. எனவே மனுதாரருக்கு நீதியின் நலன் பொருட்டு வாய்ப்பு வழங்கப்பட வேண்டியதாலும் பல்வேறு வழக்குகள் பல்வேறு தாவா என்பதை தவிர்த்து கொள்ள வேண்டியும், உபயதரப்பினர்களுக்கு இடையே நிலவி வரும் பிரச்சனைகளுக்கு நல்லமுறையில் தீர்வு காண முடியும் என்பதால் உபயதரப்பினர்களுக்கிடையே நிலவிவரும் பிரச்சனைக்கு எவ்வித பாதகமுமின்றி இம்மனு அனுமதிக்கக்கூடியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இந்த மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு ஜீன் திங்கள் 17 ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI  Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
IA.No.7/2024 in OS.No.72/2015
**உத்தரவு நாள் – 17.06.2025**